மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்:1, உசிலம்பட்டி
முன்னிலை திரு.எம்.உதயவேலவன், பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறைநடுவர் எண்:1
2019-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் திங்கட்கிழமை

***எம்.சி வழக்கு எண்:01/2019***

தங்கராஜ் 55/19
த/பெ லேட் கருப்பணன் ...மனுதாரர்

/எதிர்/

1) அருண்குமார் 32/19
த/பெ தங்கராஜ்
2) வசந்தகுமார் 30/19
த/பெ தங்கராஜ் ...எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கானது கடந்த 07.02.2019-ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.எம்.குபேந்திரன் அவர்கள் ஆஜராகியிருந்தும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் எவரும் ஆஜராகாமல் ஒருதரப்பு ஆக்கப்பட்ட நிலையிலும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

***உத்தரவு***

இம்மனுவானது மனுதாரரால் எதிர்மனுதாரர்களிடமிருந்து மாதம் தலா ரூ.10,000/-ம் வீதம் வாழ்க்கை பொருளுதவி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***2.மனுவின் விபரம் வருமாறு:***

மனுதாரர், இந்த எதிர்மனுதாரர்கள் தனது மகன்கள் என்றும், தனக்கும் தனது மனைவிக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தனக்கு ஒரு மகளும் உண்டு என்றும், தனது உழைப்பின் மூலம் சம்பாதித்து, எதிர் மனுதாரர்களான மகன்களை படிக்கவைத்து, மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் நடத்தி வைத்துள்ளதாகவும், மனுதாரர் தனது சொந்த உழைப்பில் கட்டிய வீட்டில், மாடிவீட்டில் 1வது எதிர்மனுதாரர் வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரரின் மனைவி சந்திரா ஆகிய

மூன்றுபேரும் சேர்ந்து கொண்டு மனுதாரரை பராமரித்துக்கொள்ளுவதாக கூறி அவர் சம்பாதித்த சொத்துக்கள் முழுவதையும், 06.10.2015ம் தேதி எதிர்மனுதாரர்கள் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றும், ஆனால் அதன்படி தன்னை பராமரிக்கவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து துன்புறுத்தி இடதுகாலில் எலும்புமுறிவு ஏற்படுத்திவிட்டார் என்றும், அதனால் மனுதாரர் உசிலம்பட்டி தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண். 296/18ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட கால்முறிவுக்கு ரூ.1.50லட்சம் வரை கடன் வாங்கி செலவழித்துள்ளார் என்றும், மனுதாரருக்கு உணவு, உடை மற்றும் மருத்துவ செலவுகளுக்கு பணம் எதுவும் கொடுக்காமல் கொடுமை செய்து வருகிறார்கள் என்றும், 2ம் எதிர்மனுதாரர் தேனியில் ஜடிரென்ட்ஸ் என்ற பெயரில் ஜவுளிக்கடை நடத்தி மாதம் ரூ.1லட்சம் சம்பாதித்து வருகிறார் என்றும், 1வது எதிர்மனுதாரர் மனுதாரரை மிரட்டி வாங்கிய சொத்துக்கள் மூலம் விவசாயம் செய்து மாதம் ரூ.1லட்சமும் வட்டிக்கு பணம் கொடுத்து அதன் மூலம் 50,000யும் சம்பாதித்து வருகிறார். எனவே, இம்மனுவானது மனுதாரரால் எதிர்மனுதாரர்களிடமிருந்து மாதம் தலா ரூ.10,000/-ம் வீதம் வாழ்க்கை பொருளுதவி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கில் ஆஜராகி எதிர்வழக்காட தவறிவிட்டனர்.

3.இம்மனுவிற்கு முடிவு காண மனுதாரர் கோரியவாறு வாழ்க்கை பொருளுதவி கிடைக்கத்தக்கதா? என்று பார்க்கவேண்டும்.

4.மறுக்கப்படாத மனுதாரின் சாட்சியத்திலிருந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையே ஆன உறவுமுறை நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மேலும், மசாஆ2 முதல் தகவல் அறிக்கையிலிருந்து எதிர்மனுதாரர்களுக்கும், மனுதாரருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை தாக்கி காயப்படுத்தி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெளிவாக தெரியவருகிறது. மனுதாரர் மேலும் தனது இடது காலில் காயம்

ஏற்பட்டு அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டதாக மசாஆ3 மருத்துவ சான்றிதழிலிருந்து தெரியவருகிறது. எனவே, மனுதாரரின் மறுக்கப்படாத சாட்சியத்திலிருந்தும், மசாஆ3 மருத்துவ சான்றிதழிலிருந்து மனுதாரர் தன்னை பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. எனவே, மகன்கள் என்ற முறையில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் வாழ்க்கை பொருளுதவி வழங்க கடமைப்பட்டவர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மனுதாரர் தனது சொந்த வீட்டிலேயே வசித்து வருவதாக கூறியுள்ளார். எனவே, மனுதாரர் வாழ்ந்து வரும் பகுதி, இன்றைய பொருளாதார சூழ்நிலை மற்றும் மனுதாரரின் உடல்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரருக்கு மாதம் தலா ரூ.1500/-வீதம் இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்குவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் மாதம், தலா ரூ.1,500/- வீதம் வாழ்க்கை பொருளுதவியாக இம்மனுத்தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்கவேண்டுமென்றும், மேற்படி நிலுவைத் தொகையையும், இந்த மாதத்திற்குரிய தொகையையும் அடுத்த மாதம் 5-ம் தேதிக்குள் வழங்கிட வேண்டுமென்றும், அதன்பிறகு அதற்கடுத்த ஒவ்வொரு மாதமும், 5ம் தேதிக்குள் வழங்க வேண்டு மென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2019-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் அவையறிய பகரப்பட்ட உத்தரவாகும்.

(ஒம்)எம்.உதயவேலவன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்:1,
உசிலம்பட்டி.

*மனுதாரர் தரப்பு சாட்சிகள்:*
மசா1 தங்கராஜ் (மனுதாரர்)

*மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:*

மசாஆ1 ஆதார் அடையாள அட்டை நகல்

மசாஆ2 காவல்நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாருக்கான முதல் தகவல் அறிக்கையின் நகல்.

மசாஆ3 மருத்துவச்சான்று.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

(ஒம்)எம்.உதயவேலவன்
மா.உ.மற்றும் நீ.ந.எண்:1,
உசிலம்பட்டி.